# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2024 சனவரி

## (203) வணிகச் சட்டம்

இந்த வினாத்தாள், (203) வணிகச் சட்டம் - 2024 சனவரி பரீட்சை ஆனது 07 கட்டாய வினாக்களை உள்ளடக்கியதாக **பகுதி A, பகுதி B, பகுதி C** என மூன்று பகுதிகளாகக் காணப்பட்டது. இந்த வினாத்தாளானது மொத்தத்தில் பரீட்சார்த்தியின் வணிகச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

மதிப்பீட்டுச் செயன்முறையின்போது அவதானிக்கப்பட்ட பொதுவான விடயங்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன :

## பகுதி - A

### வினா இல. 01

இந்த வினா 25 புள்ளிகளுக்காக 14 பகுதிகளைக் கொண்டிருந்தது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். மொத்தத்தில், பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருந்தனர்.

இலக்கம் **1.1, 1.2, 1.3** ஆகிய வினாக்களுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் அமைந்திருந்தது. வினா இல. 1.2 இற்கு, சில பரீட்சார்த்திகள் ''மேன்முறையீட்டு நீதிமன்றம்'' என்ற தவறான விடையை அளித்திருந்தனர். வினா இல. 1.3 இற்கு, சில பரீட்சார்த்திகள் ''*எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் மாத்திரமே சட்டத்தினால் செயல்படுத்தப்படுகின்றன*'' என்பதைத் தெரிவு செய்திருந்தனர். இது தவறான விடை ஆகும். வினா இலக்கங்கள் **1.4, 1.5, 1.6, 1.7, 1.8, 1.9** ஆகியவற்றுக்கு, பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

எவ்வாறாயினும், வினா இல. **1.11** இற்கு, அதிகளவான பரீட்சார்த்திகள் ''குடியியல் சட்டம்'' மற்றும் குற்றவியல் சட்டம்'' ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை இனங்காணத் தவறியிருந்தனர். அத்துடன் ஒரு கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே பணச் சலவைச் சட்டத்தின் நோக்கங்கள் தொடர்பில் வினவியிருந்த வினா இல. **1.12** இற்கு விடையளித்திருந்தனர்.

மேலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகப் பிணக்குகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நீதித்துறை சாரா பிணக்குத் தீர்க்கும் முறைகள் பற்றி அறிந்திருக்கவில்லை.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி - B

### வினா இல. 02

மொத்தத்தில், இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது. இந்த வினா காப்புறுதிச் சட்டத்தின் கோட்பாடுகள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பொதுவாக இதற்கு வெற்றிகரமான விடைகள் அளிக்கப்பட்டிருந்தன.

**(a)** எவ்வாறாயினும், காப்புறுத்தத்தக்க நாட்டம் என்றால் என்ன என்பது பற்றி எதுவும் தெரியாத குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**(b)** மேலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் ‘‘பங்களிப்புக் கோட்பாடு’’ பற்றி விளக்க முடியாதவர் களாகக் காணப்பட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 03

இந்த வினா முகவராண்மைச் சட்டம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. விசேடமாக முகவர் ஒருவரின கடமைகள் போன்றவற்றைப் பரீட்சித்திருந்தது.

மொத்தத்தில் இந்த வினாவுக்கு வெற்றிகரமாக விடையளிக்கப்பட்டிருந்தன.

(a) பெரும்பாலான பரீட்சார்த்திகள் முகவர் - முதல்வர் உறவு எவ்வாறு உருவாகிறது என்பதைக் குறிப்பிட்டு சரியான விடைகளை அளித்திருந்தனர். அவர்களிடம் அது எவ்வாறு உருவாகிறது என்பது பற்றிய சிறந்த புரிதல் காணப்பட்டது.

(b) முகவர் ஒருவரின் கடமைகள் தொடர்பில் பரீட்சார்த்திகளிடம் சிறந்த புரிதல் காணப்பட்ட போதிலும், அவர்களால் சிறந்த புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முற்றடக்கமான விடையை எழுத முடியவில்லை.

(c) ஒரு முகவர் முதல்வரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கவே செயற்பட வேண்டும். பெரும் எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் பக்தியால் சேதத்தை வசூலிக்க முடியும் என்று தெளிவான விடைகளை வழங்கியிருந்தனர். மொத்தத்தில், இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 04

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். சொற்பளவிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை.

இந்த வினா நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை.

ஒரு கையளவு பரீட்சார்த்திகள் மாத்திரமே சட்டத்தில் குறிப்பிடப்பட்டதைப் போன்று நோக்கங்களை எழுதியிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள், இருப்புகளை தேவையற்ற விதத்தில் சேமித்து வைப்பது நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றம் என்பதை உணர்ந்திருக்கவில்லை. இதனால், அவர்களால் இந்த வினாவுக்கு முற்றடக்கமான ஒரு விடையை எழுத முடியவில்லை.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

முதலாவது பகுதிக்கு மிகவும் மோசமான முறையில் விடையளிக்கப்பட்டிருந்தது. நிறுவனமொன்றின் சட்ட ஆளுமை மற்றும் தொடர்புடைய எண்ணக்கருக்கள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவு பரீட்சார்த்திகளிடம் மிகவும் குறைவாகவே காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதனால் பல தவறான விடைகள் வழங்கப்பட்டிருந்தன. நிறுவனத் திரை விலக்கப்படும் சந்தர்ப்பங்கள் பற்றிய எவ்விதமான கருத்துக்களும் அவர்களிடம் காணப்படவில்லை. ஒரு சிலர் மாத்திரமே சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

இரண்டாவது பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் வங்கியின் பொறுப்பு பற்றி விடையளித்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் அதனை வங்கியில் பணமாக்க முடியாது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.**

## வினா இல. 06

இவ்வினா தொழிற் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கு முதலாவது பகுதிக்கு விடையளிக்கும்போது, பரீட்சார்த்திகள், தொடர்புடைய TESTs இற்கு இணங்க அவர் ஒரு ஊழியரா அல்லது சுயாதீன ஒப்பந்தகாரரா என்பதைத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆனால், பல பரீட்சார்த்திகள் தமது பொது அறிவைக் கொண்டு, அவர் ஒரு ஊழியர் அல்ல என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். ஒரு சிலர் மாத்திரமே வினாவின் இந்தப் பகுதிக்கு விடையளிக்கும்போது TESTs பற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.

இரண்டாவது பகுதி தொடர்பில், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். ஆனால் இந்தப் பாடப்பரப்பு தொடர்பில் சில பரீட்சார்த்திகளின் அறிவு போதுமானதாக இருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. அத்துடன் சில பரீட்சார்த்திகள் EPF நன்மைகளுக்குப் பதிலாக பணிக்கொடைக் கொடுப்பனவுகள் பற்றி விபரித்திருந்தனர்.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி - C

**வினா இல. 07**

**பகுதி (A)**

**(a)** இந்த வினாவுக்கு குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடைகளை வழங்கியிருந்தனர். மொத்தத்தில், வினாவின் இந்தப் பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**(b)** இந்தப் பகுதிக்கு சிறிய தொகையினரே சரியாக விடையளித்திருந்தனர். இது தொடர்பான அறிவு பரீட்சார்த்திகளிடம் குறைவாகக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே பொருள்களின் உரிமையை மாற்றுவது தொடர்பில் தகவல்களை எழுதியிருந்தனர். மொத்தத்தில், இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.

**(c)** இந்தப் பகுதி பொருள்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வருகிறது. உட்கிடை நிபந்தனைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. இந்தப் பகுதிக்கு பரீட்சார்த்திகள் சரியான விடைகளை அளித்திருந்தனர். ஆனால் ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே தீர்ப்புகள் மற்றும் சட்டத்தின் பிரிவு 14 ஆகியவற்றைத் தொடர்புபடுத்தி விடைகளை அளித்திருந்தனர். மொத்தத்தில், இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

**பகுதி (B)**

(a) இந்தப் பகுதி ஒப்பந்தச் சட்டத்துடன் தொடர்புடையது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஒப்பந்த உறவைச் சரியாக ஏற்பிசைவு செய்திருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள், பராயமடையாத ஒருவர் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கான ஆற்றல் பற்றி, விடயங்களை வழங்கியிருந்தனர். அவர்களில் சிலர் பராயமடையாதவர்களுக்கு நன்மைகளை வழங்கியிருந்தனர். அவற்றில், மிகச் சிறியளவான பரீட்சார்த்திகள் தீர்ப்புகள் பற்றிய விடயங்களை வழங்கியிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம், பராயமடையாதவர்களுக்கு நன்மைகளை வழங்குகின்ற ஒப்பந்தங்களால் பராயமடையாதவர்கள் கட்டுப்பட்டுள்ளனர் என உணர்ந்திருந்தனர். மொத்தத்தில், இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

(b) பொதுவாக இந்தப் பகுதிக்கான விடைகள் வெற்றிகரமானதாக அமையவில்லை. விதிவிலக்கு விதிகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் மோசமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

**மொத்தத்தில், இந்த வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள் :</u>**

(1) பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி கேட்கப்படும் பாட விடயங்களில் விசேட கவனம் செலுத்தவும்.

(2) வினாக்களை கூர்ந்து வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும்.

(3) வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs) தவிர்நத ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(4) சுய கற்றல் புத்தகம், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் தொடர்புடைய ஏனைய வேறு விடயங்களையும் கற்றுக் கொள்ளவும்.

(5) ஆற்றல்களைக் கட்டியெழுப்புவது சரியாக இனங்காண்பதற்கு அவசியமானதாகும். வினாத்தாளுக்கு விடையளிக்கும்போது அடிப்படைக் கோட்பாடு ரீதியான எண்ணக்கருக்களை ஒப்பீடு செய்யவும்.

(6) கையெழுத்து தெளிவாக எழுதப்படுவதையும் வினா இலக்கங்கள் சரியாக இடப்படுவதையும் உறுதி செய்யவும்.

(7) வினாத்தாளில் தரப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

(8) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து, பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பீடு செய்வதன் மூலம் நடைமுறை அனுபவத்தை மேம்படுத்திக் கொள்ளவும்.

(9) சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

(10) விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்களும் சுட்டிலக்கமும் சரியாக எழுதப்பட்டுள்ளனவா என்பதை மீளவும் பரீட்சித்துக் கொள்ளவும்.

(11) முன்னாயத்தத்துடனும், பரீட்சையில் சித்தியடையும் உறுதியுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -